# நுவரேலியா மாநகரசபை

## நுவரேலியா மாவட்டம்

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 14 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுன் 14 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்டம்பர் 21 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

2012 செப்தெம்பர் 21 ஆம் திகதியன்று நகராதிபதிக்கு அனுப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட – நுவரேலியா மாநகரசபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை என்னால் வெளியிட முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட்டார் வாகனங்கள் மற்றும் கைவண்டிகளின் கீழ் கணக்கிலிடப்பட வேண்டிய ரூபா 36,514,040 பெறுமதியான 9 சொத்துக்கள் இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களின் கீழ் கணக்கிலிடப்பட்டமையால் இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் கணக்கு மீதி அதேயளவு தொகையால் அதிகரித்தும் மோட்டார் வண்டி மற்றும் கைவண்டிக் கணக்கு மீதி அதேயளவு தொகையால் குறைத்து நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவதற்கான செயற்திட்டத்தின் கீழ் நுவரேலியா மாநகரசபையின் பலநோக்கு சமூக சேவைகள் கட்டிடநிர்மாண வேலைக்கு வழங்கிய ரூபா 30,109,955 கடன்தொகை நிதிசார் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

**(அ) கணக்காய்விற்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 177,000 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) ரூபா 464,919 கூட்டுத்தொகையுடைய 11 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் 2012 ஜுலை 29 வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 65,478,234 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 61,677,541 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டின் பொருட்டுத் தலைவர் சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 71,271 | 101,847 | 74,431 |
| (ii) | குத்தகை வாடகை | 15,209 | 6,932 | 37,855 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 9,855 | 9,855 | 4,851 |
| (iv) | பிற வருவாய் | 55,795 | 44,067 | 13,746 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 111,777 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 12,831,512 |

## 2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பெறுமதி சேர் வரியில்லாது மாதாந்தம் ரூபா 362,791 கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் தனியார் பாதுகாப்புச் சேவை கம்பனி ஒன்று சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2011 மே முதல் ஒக்டோபர் வரை அவ்வரம்பினை மீறி ரூபா 268,627 குறித்த கம்பனிக்குக் கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முறையாக உடன்படிக்கை செய்து கொள்ளப்படாது கணனிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்காக உசாத்துணை நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 300,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போதியளவு பிணை பெறப்படாது ரூபா 108,860 பெறுமதியான நிர்மாணவேலைப் பொருட் கையிருப்பு சபையின் சுகாதாரக் களஞ்சியப் பிரிவு நிர்மாணவேலைகளுக்கான பிரத்தியோ ஒப்பந்தகாரர்களிடம் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) கிறகரிக்குளப் பூங்காவில் சுற்றுலாப் பயணிகளுக்கென மிதிவண்டிகளைப் பயன்படுத்துவதற்காக போட்டியுடனான கூறு விலைகள் மற்றும் முறையான உடன்படிக்கையில் ஈடுபடாது 2011 ஜூலை 11 அன்று நடைபெற்ற சபையின் பிரிவுத் தலைவர்களது கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்திற்கமையச் சேகரித்த வருவாயில் 75% குத்தகையாளருக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் சேகரித்த ரூபா 1,280,000 பணத்தில் குத்தகையாளருக்கு ரூபா 960,000 கொடுக்கப்பட்டது.

(இ) கடந்த தேர்தலின் போது புதிய சபைக்குத் தெரிவு செய்யப்படாத 5 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 115,000 பெறுமதியான நடமாடும் தொலைபேசிகளைத் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) சபையின் நிதி மற்றும் சொத்துக்களது பாவனையில் இலத்திரனியல் முறைமையை நிறுவுதற்கு கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்வி நிறுவனத்துடன் 2009 ஜுலை 2 ஆந் திகதியன்று ரூபா 2,205,000 க்கான உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டது. கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட 4 நிறுவனங்களது கூறுவிலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. 2006 ஜனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 18 ஆம் அறிவுறுத்துரைக்கு முரணாக பாதுகாப்புப் பிணைமுறியைப் பெறாது 20% முற்பணமாக ரூபா 441,000 கொடுக்கப்பட்டது. கட்டிடத் தொகுதியில் கணனி முறைமையை மீண்டும் நிறுவும்போது ஏற்படக்கூடிய ஆகுசெலவை மதிப்பாய்வு செய்யாது கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன.

## 2.6 செயற்திறன்

மீளாய்வாண்டிற்கான செயல்திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) வரவு, செலவுத் திட்டக்கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த கட்டுப்பாடு